விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்

அழகிய ஆரம்பம் 2025 August 1-15

இன்ஃ

ஈ இதழ்



தனியொரு மனிதனுக்கு
உணவில்லையேல்
ஜெகத்தினை அழித்திடுவோம்
என்றார் மகாகவி பாரதியார்!
ஆனால் - இன்றோ
தனியொரு மனிதர்கள்
வாழ்வதற்காக
ஜெகத்தினை அழித்துக்
கொண்டிருக்கிறார்கள்!



முத்து ஆனந்த் வேலூர்
செல் 7010482479


11.08.2025 அன்று
பிறந்த நாள் கொண்டாடும்
வேலூர்
திரு.முத்து ஆனந்த்
(எழுத்தாளர், கவிஞர்)
அவர்களுக்கு
இனிய
பிறந்த நாள்
வாழ்த்துக்கள்...
Happy
Birthday

முத்து ஆனந்த்-ன் சுதந்திர தினக் கவிதைகள்



முத்து ஆனந்த், வேலூர் செல் 7010482479

லட்சணம்

கொடி கட்டிப் பறக்கிறது
இன்றைய அரசியல்வாதிகளின்
சுதந்திரம்!

விரக்தி

லஞ்சம் ஊழலற்ற
நேர்மையான ஆட்சி
நம் கனவுகளிலும் கற்பனைகளிலும்!

வேதனை

பறக்க மறுக்கிறது
நம் தேசியக்கொடி
சுற்றிலும் வன்முறை!

கொடுமை

சுதந்திரம்
நன்றாகத் தானிருக்கிறது
இரு கைகளிலும் லஞ்சம்!

வரவேற்பு

நீதி நியாயம்
நாணயம் நேர்மை
வரவேற்கப்படுகிறது நீதிமன்றங்களில்
மட்டும்!

கவிதைகள்



-லி.நௌஷாத் கான்-
செல் +971 56 109 3550

நீ நனையாமல்
அந்த மழை
எப்படி அழகாகும்!

நீயிருக்கும் போது
வானில் அந்த நிலா
எதற்கு?!

கடவுளே
நிம்மதியாக வாழ வேண்டும்
அவள் பற்றிய நினைவுகளை
என்னிடமிருந்து எடுத்து விடு
மறதி சாபமல்ல
என் பார்வையில் வரம்!

கவலைகளை நேசிக்கிறேன்
ஏனெனில்
அது மட்டும் தான்
எனை அரவணைத்து கொள்கிறது!

கனவுகளில் தொடங்கி
கல்லறையில் முடிவது தான்
வாழ்க்கை!

பகலில் நிலவை
பார்க்க வேண்டும் போலிருக்கிறது
அடிக்கடி
உன் முகம் காட்டடி!

இணையவழி மோசடிக்கு
பலியாகாதீர்கள்
அழையுங்கள்
1930
புகார்களை பதிவு செய்ய
www.cybercrime.gov.in

August 2025

Mo	Tue	We	Thu	Fri	Sat	Sun
இன்று				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

அழகர் பிரிண்டர்
ALAGAR Printers & Studio
CELL : 9843018120

திருமண அழைப்பிதழ்

போட்டோ & வீடியோ

ஜிராக்ஸ்

ஆதார் கார்டு பிரிண்ட்

I.D கார்டு
கலர் ஜிராக்ஸ்

விசிட்டிங் கார்டு

விமான டிக்கெட்
URGENT DELIVERY DONE HERE
ஸ்டுடியோ ஜிராக்ஸ்

புகைப்படலம்



சசிகலா விஸ்வநாதன்
Mob No 9900088027

தெளிவாகத் தான் தெளிந்து
தெரிந்தது.

கண்ணீர் திரையிட;
பார்வை மங்கி,
புகைப்படலம், என்றாக;
ஊடே, சாவதானமாகத் தேட.
பார்ப்பது கண் அல்ல; மனமல்லவா!

பல்லாங்குழி ஆட்டத்தில்
பொய்யாய் நான்
'காசி' பொத்தியதை
கண்டும் காணாமல் விட்டதும்

ஆடு புலி ஆட்டத்தில்
வலுவுக்கு ஆடு தலை கொடுத்ததும்..

புலி தானாக வந்து கட்டுப் பட்டதும்..

சொக்கட்டான் விளையாட்டில்
உனக்கு விழும் தாயம்
எப்போதும் 'இரண்டு' என்று ஆனதும்,

பரமபத விளையாட்டில்
ஏணியில் நான் ஏறிய படியே...

நீ பாம்பினால் கொத்து
வாங்கி இறங்கிய படியே...

இருந்த மர்மம் எல்லாம்
அன்றே உனக்குத் தெரிந்தும்,

விளங்காமல் இருந்தது ஒன்றே.
வங்கியில் அலுவலராக இருந்த
என் அப்பா, அப்பாவியா?



எப்படி படிப்பது என்ற குழப்பமா?

நீங்கள் TNPSC தேர்வுக்கு படிக்கிறீர்களா?

சிறந்த திட்டமிடல் கொண்ட புத்தகம்...

புத்தகம் 100.00
கூரியர் 50.00
மொத்தம் 150.00
G.Pay 7094053241



மனிகதை

மலர்மதி
செல் 8667417874

ஆசீர்வாதம்

“அம்மா” என்ற தலைப்பில் நான் எழுதிய கவிதைக்கு முதல் பரிசு கிடைச்சிருக்கு, என்னை ஆசீர்வாதம் பண்ணுங்கம்மா..” என்றான் கவிஞர் குசேலன், முதியோர் இல்லத்தில் இருக்கும் தன் தாயிடம்!



ஆடையற்ற காதல்..

சசிகலா திருமால்
கீழப்பழுவூர்

ஆடையற்று இருந்த போதிலும்
காமம் கரைந்து
காதல் மிருகம் தான்
தலைத்தூக்கியது அவர்களிடம்..

ஒற்றை ஆப்பிளைப்
பகிர்ந்து உண்ணும் பக்குவம்
இருந்தது அவர்களிடம்...

ஆடையை லட்சியம்
செய்யாததாலோ என்னவோ
அங்கத்தை ஓர் பொருட்டாகவே
கருத்தில் கொள்ளவில்லை அவர்கள்..

ஆடை சற்றே விலகினாலும்
கவனம் சிதறி
காமம் தலைக்கேறுபவர்களிடம் இருந்து
சற்றே தள்ளி இருந்தவர்கள் அவர்கள்..

உணர்ச்சிகளை உள்ளடக்கி
உணர்வுகளுக்கு மதிப்பளித்து
உன்னதமான காதலை
செப்பியவர்கள் அவர்கள்..

கடித்துண்ட ஆப்பிளின்
ஒற்றைப் பகுதியில்
ஓராயிரம் உணர்வுகளை
நமக்காய் விட்டு சென்றவர்கள் அவர்கள்..

இங்கு.. ஆடையற்ற காதலும்
அழகாய்தான் இருக்கிறது..
அற்புதமான காதல் உணர்வுகள்
ஆதாம் ஏவாளோடு
ஆதியும் அந்தமுமாய்
முடிந்துவிட்டதோ என்னவோ தெரியவில்லை...
இப்போது எங்கு தேடியும் கிடைக்கவேயில்லை...



ஆகச்சிறந்தவன்



கோவைக்கவி
புவனா

எனது எண்ணத்திற்கு
வண்ணம் தீட்டி-
என்னை ஓவியமாக்கும்
ரவிவர்மனின்
சீடன் அவன்!

எனது விழி மொழிகளுக்கு-
ஒலி ஒளி அமைக்கும்
பாரதிராஜாவின்
பற்றாளன் அவன்!

எனது காதலின்
நீள அகலத்தையும்-
ஆழத்தையும் கூடக் கண்டுபிடித்த
கொலம்பஸின்
பேரன் அவன்!

மொத்தத்தில்-
என்னவன்
ஆகச்சிறந்த காதல் கவிஞன்!

==========

சுவர்க்கம்



பி. ஆர். கிரிஜா
சென்னை

அனுதினம் விடியலில்
புள்ளினங்கள் இசை மயக்கும் சரசாங்கி
சன்னலோர அணிலின் பக்க வாத்திய இசை
பனி படர்ந்த புல்லில்
நுணல் பாடும் பண்
தெருவோர ஆலய
நாதஸ்வரத்தில் தென்றலாய் பூபாளம்
சுவற்றில் பல்லியின்
பாவனி ராகம்
தென்னை மர உச்சியில் பாளையின்
அசைவு
செவிக்கினிய
சண்முகப்பிரியா
என் அன்னையின் இனிய ஆபேரி
இதை விட சுவர்க்கம்
வேறுண்டோ இப்புவியில் !

தாய்மையின் மகிழ்ச்சி!



குடந்தை
பரிபூரணன்
செல் 63845 38289

பிள்ளை
அழும்போது
பெற்றவள் மகிழ்ந்திருக்க
உள்ள தருணம் ஒன்றேதான்,
கொல்லும்
பிரசவத்தின் பின்பே பிள்ளை
அழுதால்தான்
உயிர்பெற்று உள்ளதென
உவப்பாள் !!

==========

காலணிகளின் புலம்பல்

டீ. என். பாலகிருஷ்ணன்
மடிப்பாக்கம் சென்னை
கைபேசி: 9884808965

மாமனார் மாமியாரோடு
மனைவியை 'ஆடி' க்கு
ரயிலேற்றி அனுப்பிவிட்டு
வீட்டுக்கு திரும்பியவன்,
ஆத்திரத்தில்
தன் ஒரு காலணியை
வாசலின்
வலப்புறத்திலும்
மற்றொன்றை இடப்புறத்திலுமாக
கழட்டி எறிந்துவிட்டு
வீட்டினுள் நுழைந்து
கதவைப் படீரென்று
சாத்தி, தாழ்ப்பாள்
போட்டதைப் பார்த்த
அவனது இரு காலணிகளும்,
'நாங்களாடா உன்னையும்
உன் மனைவியையும்
பிரிச்சோம்?
எங்களை ஏன்டா பிரிச்சி
போட்டுட்டுப் போறே' என்று
புலம்பின.

சிரிப்பு



அம்மா...வீட்டு பத்திரம்
உன்னிடம்தானே...இருக்கிறது.

ஆமா.எதற்கு கேட்கிறாய்?.

நம்மிடம் இருக்கும் கோபத்தில்...
அப்பா!வீட்டு பத்திரத்தை கோயில்
உண்டியலில் போட்டு விட போகிறார்.

திருச்சிற்றம்பலம் சுரேஷ்
செல் 9092142678

==========

அவர் போலி டாக்டர்ன்னு எப்படி
சொல்றடா?

வயிறு எரியுதுன்னு சொன்னா யார்
பத்தவெச்சதுன்னு கேக்கறாரே

ஏ. மூர்த்தி
திருவள்ளூர் மாவட்டம்
கைப்பேசி -9600886441.

==========

பரவாயில்லையே வாடகை வீட்டில்
ஏசி எல்லாம் மாட்டி இருக்கீங்க ....

நீங்க வேற வயித்தெரிச்சலை
கிளப்பி கிட்டு பேன் மாட்டினால்
தூக்குல தொங்கிடுவாங்க அதான்...



நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி
அலைபேசி 99442 84135

சிரிப்பு

நோயாளி : டாக்டர், எனது மறதி நோய்க்கு மருந்து சீட்டு எழுதி தர்றதா சொல்லிட்டு ஒரு மணி நேரமா எதையோ தேடுறீங்களே! எதை டாக்டர்?

டாக்டர் : பேனாவை மறந்து எங்கோ வைத்துட்டேன்.


நாஞ்சில் சு. நாகராஜன்
பறக்கை, கன்னியாகுமரி
செல். 9486387026

==========





கசியாத ஈரம்!



செத்துப்போன
சிறைக் கைதியின்
உடம்பெங்கும்
ரத்தக் கசிவுகள்.
துளியும் கசியவேயில்லை...
அடித்தே கொன்ற காவலர்களின்
இதயத்தில் ஈரம்!

சு.அருண் பிரகாஷ்
இராமச்சந்திரபுரம்
அலைபேசி: 8526037792



சுதந்திர தினச் சிறப்புக் கவிதை

முத்து ஆனந்த் வேலூர்
Cell 7010482479

சுதந்திரம்



முடிவில்லாமல்
நீண்டு
கொண்டேயிருக்கிறது
வரதட்சணைக்
கொடுமைகள்!
அளவில்லாமல்
போய்க் கொண்டேயிருக்கிறது
பாலியல் வன்முறைகள்!
இப்படி இன்னமும்
சொல்லிக் கொண்டே போகலாம்!
நம்
சுதந்திர நாட்டின்
சுதந்திர தினச் செய்திகளை!

கிடைத்து விடுகிறது சுதந்திரம்

யாருக்குக் கிடைக்கிறதோ
இல்லையோ
கட்அவுட்களை
அபிஷேகம் செய்பவர்களுக்குக்
கட்டாயம் கிடைத்து விடுகிறது
பால்!
யாருக்குக் கிடைக்கிறதோ இல்லையோ
மது குடிப்பவர்களுக்குக்
கட்டாயம் கிடைத்து விடுகிறது
பணம்!
யாருக்குக் கிடைக்கிறதோ இல்லையோ
ஏமாற்றுபவர்களுக்குக்
கட்டாயம் கிடைத்து விடுகிறது
கா த ல்!
யாருக்குக் கிடைக்கிறதோ இல்லையோ
அலட்சியம் செய்பவர்களுக்குக்
கட்டாயம் கிடைத்து விடுகிறது
சுதந்திரம்!



அனைவருக்கும் வணக்கம்.
இந்த இதழில் சுதந்திர தின சிறப்பு இதழாக திரு.முத்து ஆனந்த் அவர்களின் கவிதைகளை வெளியிட்டுள்ளோம். சுதந்திர தினத்திற்கு ஏகப்பட்ட செய்திகள் வெளியிடலாம். அவ்வளவு உள்ளது. எனவே போராடிய வீரர்களுக்கு ‘ வீர வணக்கங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

திரு.முத்து ஆனந்த் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

இதழில் நிறைய எழுதுங்கள். இன்று-வைப் பற்றிய உங்கள் உள்ளம் சொல்வதை பகிருங்கள். சிறந்த விமர்சனம் ஒன்றுக்கு ரூ.100 பரிசு உண்டு. 20 வரிகளுக்கு மிகாமல் சுருக்கமாக வாட்சப்பில் மட்டும் எழுதுங்கள்.

புதிய உலகங்களை படைத்துக்கொண்டே இருப்போம்.

நன்றி

வெ.கோபிநாத், ஆசிரியர்.

உங்கள்
படைப்புகளை
முன்னரே பார்க்க
இன்று இ இதழின்
சேனலில்
இணையுங்கள்...

மற்றும்
பொழுதுபோக்கு
செய்திகளையும்
தினமும்
கண்டு
மகிழுங்கள்...

அருகில் உள்ள
க்யு ஆர் கோடை
ஸ்கேன் செய்து
இணையுங்கள்...

இன்று / ஈ இதழ்
WhatsApp channel

கதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே...
யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல...

அழகிய ஆரம்பம் இன்று ஈ இதழ் வெளியிடுபவர் ஆசிரியர்
திரு.வெ.கோபிநாத் இன்று ஈ இதழ் - 29 சக்தி நகர்,
ஆதம்பாக்கம், சென்னை செல் 7094053241

இன்று இதழை படித்ததற்கு நன்றி